




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.8.2023) சென்னை, எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கத்தில் நடைபெற்ற 7வது "ஆசிய ஆடவர் ஹாக்கி கோப்பை 2023 சென்னை இறுதிப் போட்டியில் இந்தியா மலேசியா நாடுகளுக்கிடையேயான ஹாக்கி போட்டியை தொடங்கி வைத்து, போட்டியினை பார்வையிட்டார். உடன் ஒன்றிய தகவல் மற்றும் ஒளிபரப்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சர்வதேச ஹாக்கி சம்மேளனத்தின் தலைவர் முகமது தயப் இக்ராம், ஹாக்கி இந்தியா தலைவர் டாக்டர் திலீப் திர்கி, சர்வதேச சதுரங்கக் கூட்டமைப்பின் துணைத் தலைவர் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த், ஆகியோர் உள்ளனர்.

### நாங்குநேரி சம்பவத்தை நேரில் பார்த்து மாரடைப்பால்

# உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஆக. 13–

திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி சம்பவத்தை நேரில் பார்த்து மாரடைப்பால் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், நான்குநேரி வட்டம் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த திருமதி.அம்பிகா என்பவரது மகன் சின்னத்துரை மற்றும் மகள் சந்திரா செல்வி ஆகிய இருவரையும் கடந்த 9–8–2023 அன்று அரிவாளால் தாக்கப்பட்ட சம்பவத்தை நேரில் பார்த்த அவர்களது உறவினர் கிருஷ்ணன், த/பெ.சுடலைமுத்து (வயது 59) என்பவர் அதிர்ச்சியில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த கிருஷ்ணன் அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பாகிஸ்தானில் 21 பயங்கரவாதிகளை கைது செய்த ராணுவம்!

இஸ்லாமாபாத், ஆக.14-

பாகிஸ்தானில் 21 பயங்கரவாதிகளை கைது செய்த ராணுவம் அவர்களிடம் இருந்து கையெறி குண்டுகள், துப்பாக்கி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களை கைப்பற்றினர்.

பாகிஸ்தானில் ஐ.எஸ்.ஐ.எஸ்., தெஹ்ரீக்இதலீபான் உள்பட பல்வேறு பயங்கரவாத குழுக்கள் செயல்படுகின்றன. இவர்கள் பொதுமக்கள் மீது அவ்வப்போது தாக்குதலை நடத்தி அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இவர்களை ஒழிப்பதற்கு அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இந்த நிலையில் 21 பயங்கரவாதிகள் கைது செய்யப்பட்டனர்.

### சென்னையின் புதிய பண்பாட்டு அடையாளம்

# கலைஞர் பன்னாட்டு அரங்கம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!

சென்னை, ஆக. 14 -

சென்னை மாநகரில் அமையவுள்ள கலைஞர் பன்னாட்டு அரங்கம், ஒரு பண்பாட்டு அடையாளமாகத் திகழும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைத்தளப் பதிவு வருமாறு : -

**இந்த நெடுநாள் ஆவலைச் சென்னை விரைவில் நிறைவுசெய்யும்.**

**கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமையவுள்ள கலைஞர் பன்னாட்டு அரங்கம் பெரிய அளவிலான இசை நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள், கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளை நடத்துவதற்கான உலகத்தரம் வாய்ந்த இடமாக அமையும்.**

**சிறந்த அமைவிடம், உணவகங்கள், உணவுக்கூடங்கள், வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் அருமையான போக்குவரத்து இணைப்பு வசதிகளுடன் கூடிய இது சென்னை மாநகரின் புதிய பண்பாட்டு அடையாளமாகத் திகழும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### யாருடைய மேலாண்மை பற்றி யார் கருத்து சொல்வது?

# பா.ஜ.க. ஆட்சியில் ஒன்றிய அரசின் கடன் 60 சதவீதமாக அதிகரிப்பு!

## நிர்மலா சீதாராமனுக்கு அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் பதிலடி!

மதுரை, ஆக.14 -

'யாருடைய மேலாண்மை யார் கருத்து சொல்வது?. பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்பு ஒன்றிய அரசின் கடன் 60 சதவீதமாக உள்ளது' என நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமனுக்கு, அமைச்சர் பிடிஆர். பழனிவேல் தியாகராஜன் பதிலடி கொடுத்துள்ளார்.

மதுரையில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் விழா மற்றும் மதுரை மத்திய தொகுதியில் அடுக்குமாடி குடியிருப்புக்கான பணிகள் துவக்க விழா நேற்று நடந்தது. இவ்விழாக்களில் பங்கேற்ற தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் பிடிஆர்.பழனிவேல் தியாகராஜனிடம் நிருபர்கள், "கடன் வாங்குவதில் தமிழகம் முதலிடத்தில் இருக்கிறது என்று ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளாரே" எனக்கேட்டனர்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் கூறியதாவது:

உற்பத்தி திறனை வைத்துத்தான் கடனை மதிப்பிட வேண்டும். கடன் வாங்குவதில் இரண்டாவது இடத்தில்தான் நாம் இருந்தோம். 2014 முதல் 2021 வரை அ.தி.மு.க. ஆட்சி இல்லாமல் இருந்திருந்தால், நாமும் கடன் வாங்குவதில் இரண்டாவது இடத்தில் தான் இருந்திருப்போம். கடன் அளவு மாநிலத்தின் உற்பத்திக்கு ஏற்ப தான் இருக்கும். நிர்மலா சீதாராமன் சொன்ன நம்பரில் தவறில்லை. மகாராஷ்டிரா மட்டும் தான் தமிழகத்தை விட உற்பத்தி அதிகம் உள்ள மாநிலம். அவர்களுக்கு கடன் குறைவாக இருக்கிறது என்றால் அவர்கள் நிதியை சிறப்பாக கையாள்கின்றனர்.



தமிழகத்தில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா தண்டனை பெற்று சிறைக்கு சென்ற பிறகு, ஆட்சியாளர்கள் நிதி ஆதாரத்தை முறையாக கையாளவில்லை. இதனாலேயே 2014 முதல் 2021 வரை பொருளாதார நிதிநிலை கீழிறங்கி விட்டது. தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின் நிதி நிலையை அதிகரித்துள்ளோம். உற்பத்தி திறனை அதிகரிக்க, அதிகரிக்க நிதித் தேவையும் அதிகரிக்கும்.

ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் உற்பத்தி இல்லாமலேயே, 60 சதவீத கடனை வாங்கி விட்டனர். கடனை ரூபாயில் கணக்கிடாமல் மொத்த உள்நாடு உற்பத்தியில் (ஜிடிபி) கணக்கிட வேண்டும். தமிழ்நாடு அரசின் கடன் ஜிடிபியில் 27% தான்.

ஆனால், ஒன்றிய அரசு கடன் ஜி.டி.பி.யில் 60 சதவீதமாக இருக்கிறது. இது பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு அதிகமானது. யாருடைய மேலாண்மை பற்றி யார் கருத்து சொல்வது? தகவல் அடிப்படையில் நிர்மலா சீதாராமன் சொன்னது உண்மை. அரசியல் ரீதியாகவோ, உற்பத்தி அடிப்படையிலோ ஒப்பிட்டு பார்த்தல் நான் சொல்வது புரியும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### ஆர்.கே. நகரில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை ஆக. 14-

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 43(அ) வட்ட கழக சார்பில்,மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா ஆலோசனைப் படி வட்டச் செயலாளர் வீ.வடிவேல் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5வது நினைவு நாளை முன்னிட்டு காசிமேடு புதுமனை குப்பம் அருகே முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி 500 நபர்களுக்கு அறுசுவை உணவை பகுதிச் செயலாளர் இரா.லட்சுமணன் முன்னிலையில் ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே. ஜே.எபினேசர் வழங்கினார்.

இந்நிகழ்வில் இரா.மதிவாணன், என்.அனிபா, ஆர்.டி.ராஜா,கே.பாலு, இர.பொன்இளவரசன், மற்றும் இளைஞர் அணி நண்பர்களும் பாகமுகவர்களும்,கழக தோழர்களும் கலந்து கொண்டனர்.

### தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக கொண்டாட முடிவு!

## துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தலைமையில் நடந்த மகளிரணி கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, ஆக 14-

தமிழினத் தலைவர் - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை பல்வேறு வகையில் கொண்டாடுவது என தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி - பிரச்சாரக்குழு - சமூக வலைதள பிரிவு - ஆலோசனைக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி - பிரச்சாரக்குழு - சமூக வலைதளபிரிவு - ஆலோசனைக்குழு ஆகியவற்றின் மாநில நிர்வாகிகள் கூட்டம் நேற்று (12.8.2023), மாலை 4.00 மணியளவில் கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது நிறைவேற்றப்பட்டட தீர்மானங்கள் பின்வருமாறு:

**தீர்மானம் : 1**

**உழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா**

1924 ஜுன் 3 - இந்த நாள் இவ்வளவு சிறப்புப் பெறப் போகிறதென்று அந்த நாளில் யாருக்கும் தெரியாது. 1924 ஜுன் முதல் 2023 ஜுன் 3க்கு இடையில் 100 ஆண்டுகள் நூறாயிரம் சாதனைகள். எத்தனை உழைப்பு, எத்தனை சிறப்பு, எத்தனை போராட்டம், எத்தனை களங்கள், எத்தனை தியாகங்கள். அதுமட்டுமா? சமூகநீதியை நிலைநாட்ட அவரின் பரிமாணங்கள்தான் எத்தனை? அரசியல்வாதியாக, சிறந்த பேச்சாளராக, கவிஞராக, நடிகராக, இலக்கியவாதியாக, சட்டமன்ற உறுப்பினராக, எதிர்க்கட்சித் தலைவராக, தமிழக முதல்வராக, அவர் உழைத்த உழைப்பு, தமிழ்நாட்டுக்காக - தமிழ்நாட்டு மக்களுக்காக அவர் நிகழ்த்திய சாதனைகள் எண்ணிடலங்கா. அதனைப் போற்றிட, இந்த நூற்றாண்டல்ல தொடர்ந்து பலப் பல நூற்றாண்டுகள் கலைஞர் சாதனைகள் போற்றப்படும். தலைமைக் கழக அறிவிப்புக்கு ஏற்ப, தி.மு.க. மகளிர் அணி, தமிழினத்தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை பல்வேறு வகையில் சிறப்பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் : 2**

சொத்தில் பெண்களுக்கு சமஉரிமை - பெண்கள் தங்கள் காலில் நிற்க வழிவகை செய்யும் சுயஉதவிக்குழு - பெண்களுக்கான தனி காவல் நிலையம் - உள்ளாட்சிகளில் பெண்களுக்கு இடஒதுக்கீடு என பெண்களுக்கான எத்தனையோ சாதனைகளை முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்தபோது நிறைவேற்றித் தந்தார். அவர் வழியில் இன்று 'திராவிட மாடல்' அரசை செம்மையுற நடத்திக் கொண்டிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள், பதவியேற்றவுடனே பெண்களுக்கான இலவசபேருந்து கட்டணம் - கல்லூரி படிக்கும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் உதவித் தொகை - மூவலூர் ராமாமமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் - அதிமுக ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம் உழைக்கும் மகளிர்க்காக "தோழி விடுதிகள்" திட்டம் - செப்டம்பர்15 பேரறிஞர் அண்ணா பிறந்த நாளன்று துவக்கப்பட உள்ள "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்" நிறைவேற்றப்பட உள்ளது.

மணிப்பூரில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை கண்டு, மனம் பதறிய தமிழ்நாடு முதலமைச்சர் உடனடியாக ரூபாய் பத்து கோடியை அம்மாநிலத்திற்கு தருவதாக அறிவித்துள்ளார். அவரின் இந்த மனிதாபிமானச் செயலையும் - பெண்களுக்காக தொடர்ந்து நிறைவேற்றி வரும் திட்டங்களுக்காகவும் இந்த மகளிர் அணிக் கூட்டம் தனது நன்றியையும் - பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 3**

மணிப்பூர் மாநிலம் இந்தியாவில்தானே இருக்கிறது. மூன்று மாதங்களுக்கும் மேலாக, அங்கே எத்தனை கொடுமைகள் - எவ்வளவு அவலங்கள் - எத்தனை உயிரிழப்பு - எத்தனை பெண்கள் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர் இரண்டு பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு நடுச்சாலையில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர் - ஊர் எரிந்து கொண்டிருக்கிறது - மக்கள் கதறிக் கொண்டிருக்கின்றனர் - உலக நாடுகளுக்கு முன்பு, இந்திய நாடே வெட்கித் தலைகுனியுமளவுக்கு இந்த கோர சம்பவங்கள் இன்றளவும் தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கிறது.

இக்கொடுமைகள் எதையும் கண்டுகொள்ளாமல், பாராமுகமாக இருக்கும் மணிப்பூர் மாநில பாஜக அரசையும் - ஒன்றிய பாஜக அரசையும் இம்மகளிர் அணிக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

**தீர்மானம் : 4**

தன் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து தவித்துக் கொண்டிருக்கும் மணிப்பூர் மக்களுக்கும் - தங்கள் மானத்தையையும், மரியாதையையும் இழந்து கதறிக் கொண்டிருக்கும் பாதிக்கப்பட்ட சகோதரிகளுக்கும் தி.மு.க. மகளிர் அணி தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் - ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உங்கள் துயர் துடைக்க தி.மு.க. மகளிர் அணி என்றும் துணை நிற்கும் என்பதையும் இக்கூட்டம் உறுதிபட தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் : 5**

நாடாளுமன்ற மன்றத்தில், மணிப்பூரில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை சுட்டிக்காட்டி, இந்திய பாராளுமன்றத்தில் உரையாற்றிய கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்களுக்கு மகளிர் அணியின் இக்கூட்டம் தனது பாராட்டுதல்களை தெரிவித்துக் கொள்வதோடு, கனிமொழி, எம்.பி., அவர்களை துணைப் பொதுச்செயலாளராக்கி - தி.மு.க.மகளிர் அணிக்கு வழிகாட்டியாகவும் நியமித்த கழகத் தலைவர் தளபதி அவர்களுக்கு, மகளிர் அணி தன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. வழக்கறிஞர் அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 15-8-2023 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் சட்டத்துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை அவர்கள் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் தலைமைக் கழக வழக்கறிஞர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா

2. முத்தமிழறிஞர் கலைஞர் வழக்கறிஞர் பேரவை செயல்பாடுகள்

3. பழைய உறுப்பினர்கள் புதுப்பித்தல் புதிய உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து

'அண்ணா அறிவாலயம்"
சென்னை18.
நாள்: 12 - 8- 2023

**என்.ஆர்.இளங்கோ**, எம்.பி.,
செயலாளர்,
தி.மு.க. சட்டத்துறை



நாகை மாவட்டம் , திருமருகல் ஒன்றியம் திருப்புகலூர் ஊராட்சியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கால்நடை மருத்துவ முகாமை நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன் வள்ர்ச்சிக் கழகத் தலைவர் என்.கௌதமன் தொடங்கி வைத்தார். உடன் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ஜானிடாம்வர்க்கீஸ், நாகை சட்ட மன்ற உறுப்பினர் முகமதுஷநவாஸ், திருமருகல் ஒன்றியக் கழகச் செயலாளர் செல்வ.செங்குட்டுவன் மற்றம் பலர் உள்ளனர்.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(E)49/2023 நாள் 11.08.2023

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி– பாதாள சாக்கடை இணைப்புகளுக்கு புதிய கட்டண விகிதம் திருத்தி அமைத்தல் மற்றும் இணைப்புகள் சரிபார்த்தல் | 1 பணி | 30.08.2023 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 31.08.2023 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1, தொலைபேசி எண் : 0422 - 2396026. E-mail : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 421/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 12.08.2023

" சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"




திருவாரூரில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மாபெரும் மாநில அளவிலான கூடைப்பந்துப்போட்டியை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன் துவக்கி வைத்தார். முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன்,நகர செயலாளர் வாரை.பிரகாஷ், பொதுக்குழு உறுப்பினர் டி.செந்தில், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் எம்.என்.ராஜா , துணை அமைப்பாளர்கள் வீ.ஆர்.என்.பன்னீர்செல்வம் , பி.ஜி. ஆர். ராஜாராமன், கோபி, விமல்,இளவரசன் உள்ளிட்டோர் உடன் பங்கேற்றனர்.